சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP. 24/2016**

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் திங்கட்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, தலைமை எழுத்தர் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரகுபதி | தொழில் | இராணுவம் ஓய்வு |
| தந்தை பெயர் | கோவிந்தராஜ் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**10.03.2025 முதல் விசாரணை**

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, 28.02.2016 தேதியிட்ட ஆரணி நகர காவல் நிலைய குற்ற எண்.106/2016 வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN32N2831 வாகனத்தின் பதிவுச்சான்று நகல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரங்கசாமி ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN32N2831 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாத்தீமா ராணி பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.01.2021 தேதியிட்ட ஜனவரி 2016க்கான சம்பள பட்டியல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)